26-1-2009

## இளம் விஞ்ஞானிகள் அணிகள்

# கலந்தாய்வுக் கூட்டம்





**ஆகாயம் அணியின்** இளம் விஞ்ஞானிகள் கலந்தாய்வுக்கூட்டம் குழித்துறை அன்னம்மாள் செவிலியர் பயிற்சிக்கல்லூரி அரங்கில் நடைபெற்றது. அணியின் மருத்துவ ஆலோசகரும் இந்திய மருத்துவ சங்கத்தின் தேசியச் செயலாளருமாகிய டாக்டர் ஏ. ஜெயலால் பருவநிலை மாற்றத்தால் மருத்துவத்துறைக்கான சவால்கள் என்னும் தலைப்பில் உரை நிகழ்த்தினர். அணித்தலைவி ரேஷ்மாரதி அனைவரையும் வரவேற்றார் வழிகாட்டி ஆசிரியைகள் ஜேன்காதரின், ஜாஸ்மின் ஆகியோர் கருத்து விளக்கங்கள் அளித்தனர். குமரி அறிவியல் பேரவை அமைப்பாளர் முள்ளஞ்சேரி மு.வேலையன் முன்னிலை வகித்தார். அணியின் கண்வீனர் சதீஸ்குமார் நன்றி கூறினர்.









**நீர் அணியின்** கலந்தாய்வுக்கூட்டம் ஆசாரிப்பள்ளம் மருத்துவக் கல்லூரி வளாகத்தில்

நடைபெற்றது. அணியின் மருத்துவ ஆலோசகர்களும் தமிழ் நாடு அரசு மருத்துவர் சங்க குமரிமாவட்டத்.தலைவரும் பேராசிரியர் டாக்டர்.அருள் பிரகாஷ் நீரினால் பரவக்கூடிய நோய்கள் குறித்து விளக்கமளித்தார். வழிகாட்டி ஆசிரியை கே.ஆர் உமா கருத்து விளக்கமளித்தார். அணியின் தலைவி ஹெமினிசா அனைவரையும் வரவேற்றார். அணியின் விஞ்ஞானி பால்வண்ணன் இயற்கைப்பேரிடர்கள் குறித்து விளக்கமளித்தார். அணியின் கண்வீனர் ஜாண்ரபிகுமார் கருத்து நெறியாக்கம் செய்து நன்றி கூறினர்.

**நிலம் அணியின்** கலந்தாய்வுக்கூட்டம் சாங்கை சிக்மா மருத்துவமனை



வளாகத்தில் நடைபெற்றது. அணியின் அறிவியல் ஆலோசகரும் மார்த்தாண்டம் பொறியியல் கல்லூரியின் துணைத்தலைவரும் பேராசிரியர் ஜேம்ஸ்வில்சன் கடல் மண்டலக்கழிவுகள் குறித்து அறிவியல் விளக்கம் அளித்தார். அணியின் தலைவி பிரியங்கா அனைவரையும் வரவேற்றார். வழிகாட்டி ஆசிரியைகள் கமலபிரியதர்ஷினி ஹெலன் பிரான்சிஸ் ஆகியோர் கருத்து விளக்கம் அளித்தனர். கண்வீனர் ஜெயகுமாரி நன்றி கூறினார்.

**நெருப்பு அணியின்** கலந்தாய்வுக்கூட்டம் சுவாமியார் மடம் டாக்டர் விஜயகுமார்



மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்றது. அணியின் மருத்துவ ஆலோசகரும் மருத்துவ சங்கத்தின் தேசியத் துணைத் தலைவருமாகிய டாக்டர் விஜயகுமார் நுண்ணுயிரிநோய்கள் குறித்து உரையாற்றினார்.



அணியின் தலைவி தர்ஷினி அனைவரையும் வரவேற்றார்



அமைப்பாளர் முள்ளஞ்சேரி மு.வேலையன் முன்னிலை வகித்தார். வழிகாட்டி ஆசிரியை பபிதா கருத்துரை வழங்கினார். அணியின் விஞ்ஞானி பென்சிகர்ராஜன் உயிரிப் பல்வகைமை குறித்து ஆய்வு விளக்கமளித்தார். டாக்டர் நவகுமாரி 'மனித ஆற்றல் பலப்படுத்தும் திறன்' குறித்து விளக்கினார். அணியின் கண்வீனர்கள் ஜே.ஜோபிரகாஷ், மெர்லின் ஜாஸ்மின் மேரி ஆகியோர் கருத்.துக்களை நெறிப்படுத்தும் விளக்கம் அளித்தனர் வழிகாட்டி ஆசிரியை சோபியா நன்றி கூறினார்.





இவண்

அமைப்பாளர்

முள்ளஞ்சேரி மு.வேலையன்

